**சார்பு நீதிமன்றம், நான்குநேரி**

**முன்னிலை. திரு. P.S. ரஷ்கின் ராஜ், B.A., L.L.M.,**

**சார்பு நீதிபதி, நான்குநேரி**

2026 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ம் நாள் திங்கள்கிழமை

**<u>அசல் வழக்கு எண்.64/2025</u>**

**<u>CNR No.TNTL27-000225-2025</u>**

மகேந்திரன் குமார் பக்மர் (HUF)

அதன் உரிமையாளர்

மகேந்திரகுமார் பாக்மர் .... வாதி

// எதிர் //

பிராங்கிளின் ஜோஸ் ... பிரதிவாதி

இந்த வழக்கானது, என் முன்பு இறுதியாக 03.08.2026 அன்று விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. C. ஹரிபாலகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. U.S. சேகர் அவர்கள் ஆஜராகியும், ஆனால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் ஒருதலைபட்சப்படுத்தப்பட்டும், வாதி தரப்பில் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.12 18:07:21 +0530

## <u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கானது, வாதிக்கு, பிரதிவாதியிடமிருந்து ரூ.4,66,000/-மும், அசல் தொகை ரூ.4,00,000/-க்கு பிராது தேதி முதல் வசூல் தேதி வரை நீதிமன்ற தாரணைப்படி வட்டியும், பின் வட்டியும் சேர்த்து வாதிக்கு நீதிமன்றம் குறிப்பிடும் காலத்திற்குள் பிரதிவாதி, வாதியிடம் செலுத்தும் படிக்கும், தவறும்பட்சத்தில் தபசில் சொத்தை பொறுத்து ஏல நடவடிக்கை மேற்கொண்டு தீர்ப்பு தொகையினை வசூல் செய்யும் விதத்தில் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கும் படிக்கும் மற்றும் செலவுத் தொகை வாதிக்கு கிடைக்கும் படிக்கும் கேட்டு வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம் :-</u>**

வழக்கு பிரதிவாதி மேற்படி வாதியின் கிளை மேலாளர் இராஜ்சங்கரை நேரில் அணுகி தனது குடும்ப செலவுக்காக தபசில் சொத்தின் அசல் ஆவணங்கள் மற்றும் மற்ற சொத்துக்களின் ஆவணங்களின்படி ரூ.8,00,000/- கடன் கேட்டுக் கொண்டதை மேற்படிகிளை மேலாளர் மூலம் வாதியை தொடர்பு கொண்டு கடன் கேட்டுள்ளார். வாதியும் ஒப்புக்கொண்டதன் பேரில் பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட தூத்துக்குடி தாலுகா, முள்ளக்காடு கிராம சொத்தை கடந்த 11.05.2023 ம் தேதி தூத்துக்குடி இணை சார்பதிவாளர் எண்.1ல் வாதிக்கு 2063/2023 என்ற அடமானம் பதிவு செய்து கொடுத்துள்ளார். அதன்படி வாதியும், தனது வங்கி கணக்கான சென்னை ஆக்சிஸ் வங்கி, ரத்தன் பஜார் கிளையில் RTGS மூலம் 320787 என்ற காசோலை மூலம்



P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.12 18:07:28 +0530

பிரதிவாதியின் வங்கி கணக்குக்கு 12.05.2023 ம் தேதி ரூ.4,00,000/-மும், 312666 என்ற காசோலை மூலம் ரூ.4,00,000/- ஆக மொத்தம் ரூ.8,00,000/-ஐ பிரதிவாதியின் வங்கி கணக்கில் செலுத்தியுள்ளார். மேலும், பிரதிவாதி 12.05.2023 ம் தேதி பிராது தபசில் 1 வது சொத்தை பொறுத்து 912/2023 என்ற அடமான ஆவணத்தின் மூலம் ரூ.2,00,000/-க்கும், பிராது தபசில் 2 வது சொத்தை பொறுத்து 913/2023 என்ற அடமான ஆவணத்தின் மூலம் ரூ.2,00,000/-க்கும் மொத்தம் ரூ.4,00,000/-த்திற்கு நாங்குநேரி சார்பதிவாளர் அலுவலகத்தில் தனித்தனியாக பிரித்து பதிவு செய்து கொடுத்துள்ளார். அவ்வாறு அடமானம் பதிவு செய்து கொடுக்கும் போது, பிராது தபசில் 1 வது சொத்தின் மூல ஆவணமான 17.10.2017 ம் தேதிய 1093/2017 மற்றும் 2 வது சொத்தின் மூல ஆவணமான 19.07.2019 ம் தேதிய 866/2019 ஆகிய ஆவணத்தின் கிரைய அசல் ஆவணங்களும், தபசில் பிராது 2 சொத்துக்களுடன் தூத்துக்குடி தாலுகா, முள்ளக்காடு கிராம சொத்தையும் சேர்த்து தனது தகப்பனார் தனக்கு பாத்தியப்படுத்திக் கொடுத்துள்ள 24.11.2022 ம் தேதிய 260/2022 என்ற பாகபாத்திய விடுதலை அசல் ஆவணத்தையும் வாதியிடம் கொடுத்துள்ளார். மேற்படி அடமான ஆவணத்தில் மகேந்திரன் அண்ட் கோ-வின் அதன் உரிமையாளர் திரு. மகேந்திரகுமார் பாக்மர் அவர்களிடம் இருந்து ஆக்சிஸ் வங்கி கிளையின் மூலம் RTGS-ன் படி கடனாக பெற்றுள்ளார் என்றும், மேற்படி அடமான தவணை காலம் 3 வருடம் என்றும், 18% வட்டியுடன் திரும்ப தருவதாகவும் உத்தரவாதம் அளித்துள்ளதுடன் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு சாட்சிகள் முன்பு கையொப்பம்



P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.12 18:07:33 +0530

செய்து கொடுத்துள்ளார். பிரதிவாதி, வாதியிடம் பெற்ற கடன் ரூ.4,00,000/-ல் ரூ.84,000/- மட்டுமே திரும்ப செலுத்தியுள்ளார். இதுசம்பந்தமாக வாதி, பிரதிவாதியிடம் பலமுறை கேட்டும் முகாந்திரம் அற்ற பதில் அளித்துள்ளதால் வாதி தன் வழக்கறிஞர் மூலம் கடந்த 30.12.2024 ம் தேதி அறிவிப்பு அனுப்பியுள்ளார். மேற்படி அறிவிப்பை கடந்த 01.01.2025 ம் தேதி பெற்றுக் கொண்ட பிரதிவாதி எந்த பதிலும் அளிக்கவில்லை. கடனையும் திரும்ப செலுத்தவில்லை என்பதால், வாதி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளதாக பிராதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3)** பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் ஒருதலைபட்சப்படுத்தப்பட்டார்.

**4)** வாதி தரப்பில், வாதி, வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. ஒருதலைபட்சப் படுத்தப்பட்டுள்ளார்.

**5) <u>தீர்வு</u> :-** இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவென்றால், வாதி கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**6)** வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. வாதி தரப்பில், வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் ஆக்ஸிஸ் வங்கியின் கணக்கு பட்டியல் வா.சா.ஆ.1 ஆகவும், 17.10.2017 ம் தேதியிட்ட

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.12 18:07:38 +0530

தபசில் 1வது சொத்தின் மூல ஆவணம் 1093/2017 அசல் வா.சா.ஆ.2 ஆகவும், 19.07.2019ம் தேதியிட்ட தபசில் 2வது சொத்தின் மூல ஆவணம் 866/2019 அசல் வா.சா.ஆ.3 ஆகவும், 24.11.2022ம் தேதியிட்ட பிரதிவாதியின் பெயரில் உள்ள பாக பாத்திய விடுதலை பத்திரம் சார்பதிவக நகல் வா.சா.ஆ.4 ஆகவும், 12.05.2023ம் தேதியிட்ட அடமான ஆவணம் 912/2023 அசல் வா.சா.ஆ.5 ஆகவும், 12.05.2023ம் தேதியிட்ட அடமான ஆவணம் 913/2023 அசல் வா.சா.ஆ.6 ஆகவும், 30.12.2024ம் தேதியிட்ட வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சல் ரசீதுடன் அலுவலக நகல் வா.சா.ஆ.7 ஆகவும், 01.01.2025ம் தேதியிட்ட ஒப்புதல் அட்டை அசல் வா.சா.ஆ.8 ஆகவும், தபசில் சொத்துக்கள் பிரதிவாதியின் பெயரில் இருப்பதற்கான வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7) மேற்கண்ட வாதி, வா.சா.1 ஆக சாட்சியம் அளிக்கும் போது, தனது முதல் விசாரணை சாட்சியத்தில், வழக்கு பிரதிவாதி மேற்படி வாதியின் கிளை மேலாளர் இராஜ்சங்கரை நேரில் அணுகி தனது குடும்ப செலவுக்காக தபசில் சொத்தின் அசல் ஆவணங்கள் மற்றும் மற்ற சொத்துக்களின் ஆவணங்களின்படி ரூ.8,00,000/- கடன் கேட்டுக் கொண்டதை மேற்படிகிளை மேலாளர் மூலம் வாதியை தொடர்பு கொண்டு கடன் கேட்டார். தானும் ஒப்புக்கொண்டதன் பேரில் பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட தூத்துக்குடி தாலுகா, முள்ளக்காடு கிராம சொத்தை கடந்த 11.05.2023ம் தேதி தூத்துக்குடி இணை சார்பதிவாளர் எண்.1ல் வாதிக்கு 2063/2023 என்ற அடமானம் பதிவு செய்து கொடுத்துள்ளார். அதன்படி வாதியும், தனது வங்கி கணக்கான



P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.12 18:07:43 +0530

சென்னை ஆக்சிஸ் வங்கி, ரத்தன் பஜார் கிளையில் RTGS மூலம் 320787 என்ற காசோலை மூலம் பிரதிவாதியின் வங்கி கணக்குக்கு 12.05.2023 ம் தேதி ரூ.4,00,000/-மும், 312666 என்ற காசோலை மூலம் ரூ.4,00,000/- ஆக மொத்தம் ரூ.8,00,000/-ஐ பிரதிவாதியின் வங்கி கணக்கில் செலுத்தியுள்ளார். மேலும், பிரதிவாதி 12.05.2023 ம் தேதி பிராது தபசில் 1 வது சொத்தை பொறுத்து வா.சா.ஆ.5, 912/2023 என்ற அடமான ஆவணத்தின் மூலம் ரூ.2,00,000/-க்கும், பிராது தபசில் 2 வது சொத்தை பொறுத்து வா.சா.ஆ.6, 913/2023 என்ற அடமான ஆவணத்தின் மூலம் ரூ.2,00,000/-க்கும் மொத்தம் ரூ.4,00,000/-த்திற்கு நாங்குநேரி சார்பதிவாளர் அலுவலகத்தில் தனித்தனியாக பிரித்து பதிவு செய்து கொடுத்தார். அவ்வாறு அடமானம் பதிவு செய்து கொடுக்கும் போது, பிராது தபசில் 1 வது சொத்தின் மூல ஆவணமான வா.சா.ஆ.2, 17.10.2017 ம் தேதிய 1093/2017 மற்றும் 2 வது சொத்தின் மூல ஆவணமான வா.சா.ஆ.3, 19.07.2019 ம் தேதிய 866/2019 ஆகிய ஆவணத்தின் கிரைய அசல் ஆவணங்களும், தபசில் பிராது 2 சொத்துக்களுடன் தூத்துக்குடி தாலுகா, முள்ளக்காடு கிராம சொத்தையும் சேர்த்து தனது தகப்பனார் தனக்கு பாத்தியப்படுத்திக் கொடுத்துள்ள வா.சா.ஆ.4, 24.11.2022 ம் தேதிய 260/2022 என்ற பாகபாத்திய விடுதலை அசல் ஆவணத்தையும் வாதியிடம் கொடுத்தார். மேற்படி அடமான ஆவணத்தில் மகேந்திரன் அண்ட் கோ-வின் அதன் உரிமையாளர் திரு. மகேந்திரகுமார் பாக்மர் அவர்களிடம் இருந்து ஆக்சிஸ் வங்கி கிளையின் மூலம் RTGS-ன் படி கடனாக பெற்றுள்ளார் என்றும், மேற்படி அடமான தவணை காலம் 3 வருடம் என்றும்,



P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.12 18:07:49 +0530

18% வட்டியுடன் திரும்ப தருவதாகவும் உத்தரவாதம் அளித்துள்ளதுடன் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு சாட்சிகள் முன்பு கையொப்பம் செய்து கொடுத்தார். பிரதிவாதி, வாதியிடம் பெற்ற கடன் ரூ.4,00,000/-ல் ரூ.84,000/- மட்டுமே திரும்ப செலுத்தியுள்ளார். இதுசம்பந்தமாக வாதி, பிரதிவாதியிடம் பலமுறை கேட்டும் முகாந்திரம் அற்ற பதில் அளித்துள்ளதால் வாதி தன் வழக்கறிஞர் மூலம் வா.சா.ஆ.7, 30.12.2024 ம் தேதி அறிவிப்பு அனுப்பினேன். மேற்படி அறிவிப்பை வா.சா.ஆ.8, 01.01.2025 ம் தேதி பெற்றுக் கொண்ட பிரதிவாதி எந்த பதிலும் அளிக்கவில்லை. கடனையும் திரும்ப செலுத்தவில்லை என சாட்சியமளித்துள்ளார். மேற்கண்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை ஆட்சேபிக்கும் விதமாகவோ, மறுக்கும் விதமாகவோ, பிரதிவாதி வழக்கில் ஆஜராகி தன்னுடைய தரப்பில் எந்த எடுத்துரைப்பும் முன்வைக்கவில்லை. எனவே வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு வழங்குவதுதான் நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**8)** முடிவாக, வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, பிரதிவாதி, வாதிக்கு ரூ.4,66,000/-ஐ செலுத்த வேண்டுமென்றும், அசல் தொகை ரூ.4,00,000/-த்திற்கு வழக்குரைத் தேதியான 12.06.2025 முதல் தீர்ப்பாணை தேதி வரை 9% வட்டியும், தீர்ப்பாணை தேதி முதல் தொகை வசூலாகும் தேதிவரை 6% பின்வட்டியும் சேர்த்து ஒரு மாத காலத்திற்குள் செலுத்த வேண்டும் என்றும், தொகை செலுத்த தவறும் பட்சத்தில் வாதி இறுதிநிலை தீர்ப்பாணைக்கு மனு தாக்கல் செய்து,



P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.12 18:07:55 +0530

தபசில் சொத்தை ஏலத்திற்கு கொண்டு வந்து, தீர்ப்புத் தொகையை ஈடாக்கி கொள்ளலாம் என்றும், ஏலத்தொகை தீர்ப்புத் தொகைக்கு குறைவாக இருந்தால் பிரதிவாதிக்கு எதிராக தனியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்றும் முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 10 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.12 18:08:00 +0530

சார்பு நீதிபதி,

நாங்குநேரி

1) **வாதி தரப்பு சாட்சிகள்** :-

வா.சா.1 - மகேந்திரகுமார் பாக்மர்

2) **வாதி தரப்பு சான்றாவணங்கள்** :-

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | --- | ஆக்ஸிஸ் வங்கியின் கணக்கு பட்டியல் |
| வா.சா.ஆ.2 | 17.10.2017 | தபசில் 1வது சொத்தின் மூல ஆவணம் 1093/2017 அசல் |
| வா.சா.ஆ.3 | 19.07.2019 | தபசில் 2 வது சொத்தின் மூல ஆவணம் 866/2019 அசல் |
| வா.சா.ஆ.4 | 24.11.2022 | பிரதிவாதியின் பெயரில் உள்ள பாக பாத்திய விடுதலை பத்திரம் சார்பதிவக நகல் |



P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.12 18:08:09 +0530

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.5 | 12.05.2023 | அடமான ஆவணம் 912/2023 அசல் |
| வா.சா.ஆ.6 | 12.05.2023 | அடமான ஆவணம் 913/2023 அசல் |
| வா.சா.ஆ.7 | 30.12.2024 | வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சல் ரசீதுடன் அலுவலக நகல் |
| வா.சா.ஆ.8 | 01.01.2025 | ஒப்புதல் அட்டை அசல் |
| வா.சா.ஆ.9 | --- | தபசில் சொத்துக்கள் பிரதிவாதியின் பெயரில் இருப்பதற்கான வில்லங்க சான்றிதழ் |

3) <u>**பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**</u> :- இல்லை

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.12 18:08:19 +0530

சார்பு நீதிபதி,

நாங்குநேரி

சார்பு நீதிமன்றம்,

நாங்குநேரி

அ.வ.எண்.64/2025

நேரிய /வரைவு தீர்ப்புரை

நாள் - 10.08.2026